*Scan the code using 'e Courts Services' Mobile application downloaded from play store*

*S.C.No. 104/2017*

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிவகங்கை.

முன்னிலை : **நா.செந்தில் முரளி., B.Sc., M.L.,**

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், சிவகங்கை.

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 10–ம் நாள் செவ்வாய்கிழமை

**அமர்வு வழக்கு எண். 104/2017**

CNR No.TNSV02-001832-2017

(இளையான்குடி, நீதித்துறை நடுவர் நீதிமன்றம், முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண். 1/2009, இளையான்குடி காவல் நிலைய குற்ற எண். 124/2008)

–––––

குற்ற முறையீட்டாளர் : தமிழ்நாடு அரசு சார்பில்
காவல் ஆய்வாளர்
இளையான்குடி காவல்நிலையம்
குற்ற எண். 124/2008

**/எதிர்/**

| | | |
|---|---|---|
| **குற்றம் சாட்டப்பட்டவர்** | : | 1. சுபேயர்அலி, **(Split up SC.No.41/2010)**<br>த/பெ. காஜா அலாவுதீன்.<br><br>2. முகமது, **(Split up SC.No.41/2010)**<br>த/பெ. காஜா அலாவுதீன்.<br><br>3. ஜியாவுதீன்(எ)கோந்தைஜியாவுதீன்<br>**(Split up SC.No.41/2010)**<br>த/பெ.யாசின்.<br><br>**4. அகமதுகாசீம் (எ) பீடாகாசீம்,<br>த/பெ.சித்திக்.** |

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.10 17:32:06 +0530

| | | |
|---|---|---|
| **குற்றம் சாட்டப்பட்டவர் மீதான குற்றச்சாட்டுகள்** | : | எதிரி – பிரிவு 109 இ.த.ச– வின் கீழும். |
| **குற்றம் சாட்டப்பட்டவர் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள்** | : | எதிரி – பிரிவுகள் 341, 324, 307, 379 உ/இ 109 இ.த.ச– வின் கீழும். |
| **குற்றம் சாட்டப்பட்டவரின் வாதுரை** | : | குற்றவாளி இல்லை. |
| **நீதிபதியின் தீர்ப்பு** | : | எதிரி, பிரிவுகள் 341, 324, 307, 379 உ/இ 109 இ.த.ச– வின் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து, எதிரியை பிரிவு 235(1) குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம், 1973–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கின் பிணைமுறி ஆவணம் மேல்முறையீடு இருப்பின் மேல்முறையீட்டுக் காலத்திற்குப்பின் ரத்தாகவும் பிரிவு 452 கு.வி.மு.ச– வின் கீழ் உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு இளையான்குடி, நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.1/2009 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு பின்னர் இந்நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு, இந்த நீதிமன்றத்தின் முன்பாக 02.03.2026–ல் இறுதி

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.10 17:32:13 +0530

விசாரணைக்காக வந்தபோது, இவ்வழக்கில் குற்ற முறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.N.விவேகானந்தன், அவர்கள் முன்னிலையாகியும், எதிரியின் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.ரவி, அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டும், வழக்காவணங்களைப் பார்வையிட்டும், இது நாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்தும், இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

இந்த வழக்கின் எதிரி மீது பிரிவு 109 இ.த.ச– வின் கீழ் குற்றம் புரிந்ததாக குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:–**

இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான சையது முகமது நஜீமுதீன் என்பவருக்கும், 4 வது எதிரி அகமது காசீம் (எ) பீடா காசீம் என்பவருக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்துவந்த நிலையில், கடந்த 24.05.2008 ம் தேதி மதியம் 13.00 மணியளவில் பெட்ரோல் பங்க் அருகே உள்ள டாஸ்மாக் மதுக்கடையின் முன்பு சிறுநீர் கழிக்கச் சென்றவரை, இவ்வழக்கின் 4 வது எதிரியின் தூண்டுதலின் பேரில், இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 1 முதல் 3 எதிரிகள் சேர்ந்து

நிகழ்நிலை புகார்தாரரை பாட்டிலால் அடித்து இத்தோடு செத்து தொலைந்து போ என 1வது எதிரி, நிகழ்நிலை புகார்தாரரின் நாடியில் குத்தி இரத்தக்காயத்தை ஏற்படுத்தியும், 3வது எதிரி நிகழ்நிலை புகார்தாரரிடமிருந்து ரூ.5000/– மதிப்புள்ள நோக்கியோ கேமரா செல்போனை பறித்துக்கொண்டும், சம்பவத்தை விலக்க வந்த சாட்சி ஜாகீர்உசேனை வழிமறித்தும், இவ்வழக்கின் 1 முதல் 3 எதிரிகள் மூவரும் செங்கற்களால் இத்தோடு செத்து தொலைந்து போடா என்ற சொல்லி உடம்பு, முகம், கழுத்து பிடரி வலது முழங்கால் ஆகியவற்றில் தாக்கி காயத்தை ஏற்டுத்தியும், நிகழ்நிலை புகார்தாரர் மற்றும் சாட்சி ஜாகீர்உசேனை கொலை முயற்சி செய்து குற்றம் புரிந்துள்ளதாக இளையான்குடி காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்களால் இளையான்குடி, நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** இவ்வழக்கில் கு.வி.மு.ச பிரிவு 207ன் கீழ் இளையான்குடி, நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அரசு தரப்பு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குற்றம் சாட்டப்பட்டவருக்கு இலவசமாக வழங்கப்பட்டது. பின்பு கு.வி.மு.ச. பிரிவு 209(அ) ன் படி இளையான்குடி, நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலிருந்து கனம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு அங்கு

கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின் இந்நீதிமன்றத்திற்கு (Made Over) மாறுதலாகி, இந்நீதிமன்றத்தில் தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டது.

**4.** கு.வி.மு.ச பிரிவுகள் 226 மற்றும் 227 ன் கீழ் இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, அரசு தரப்பு ஆவணங்களைப் பரிசீலனை செய்ததில் குற்ற அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள குற்றங்களை இவ்வழக்கு குற்றம் சாட்டப்பட்டவர் செய்திருக்கிறார்கள் என்று அனுமானிப்பதற்கு போதுமான முதல் நோக்கு ஆதாரம் வழக்கில் இருக்கிறது என்று தீர்மானித்து. கு.வி.மு.ச.பிரிவு 228 ன் படி குற்றச்சாட்டுகள் வனையப்பட்டது. எதிரி மீது பிரிவுகள் 341, 324, 307, 379 உ/இ 109 இ.த.ச– வின் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து அதனை எதிரிக்கு படித்துக்காட்டி விளக்கி கூறி வினவிய போது அதனை மறுத்து குற்றம் சாட்டப்பட்டவர் தான் குற்றவாளி இல்லை என்றும், வழக்கினை விசாரணை செய்ய வேண்டுமென கோரினர்.

**5.** அரசு தரப்பில் **அ.த.சா.1** முதல் **அ.த.சா.5** வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, **அ.த.சா.ஆ.1** முதல் **அ.த.சா.ஆ.7** வரையிலான ஆவணங்கள் அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருட்கள் ஏதும் குறியீடு செய்யவில்லை.

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.10 17:32:30 +0530

**<u>6. அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்:–</u>**

அரசு தரப்பில் சம்பவத்தில் காயம்பட்ட சாட்சியான அ.சா.1/சையதுமுகம்மது/நிகழ்நிலை புகார்தாரர், சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளான அ.சா.2/அப்துல் மஜித், அ.சா.3/நடராஜன், சம்பவத்தில் காயம்பட்ட சாட்சியான அ.சா.4/ஜாகீர் உசேன், ஆகியோர் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் அவர்கள் பிறழ் சாட்சிகளாக பாவிக்கப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள்.

**6.1.** அ.சா.5/திரு.மனோகரன், சார்பு ஆய்வாளர் தனது சாட்சியத்தில், *"நான் தமிழ்நாடு காவல்துறையில் சென்னை திருவெற்றியூர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து 31.12.2011 பணி ஓய்வு பெற்று தற்சமயம் சிவகங்கையில் வசித்து வருகிறேன். கடந்த 24.05.2008 ம் தேதி நான் இளையான்குடி காவல் நிலையத்தில் சார்புஆய்வாளராக பணியில் இருந்தபோது இளையான்குடி சுல்தான் அலாவுதின் தெருவைச் சேர்ந்த அப்துல் பாரி மகன் சையது முகமது என்பவருடன் ஜாகீர் உஷேன் என்பவரும் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை/**அ.த.சா.ஆ.1** பெற்று நிலைய குற்ற எண்.124/2008 சட்டப்பிரிவுகள் 341, 324, 336, 379,*

N SENTHIL MURALI Digitally signed by N SENTHIL MURALI Date: 2026.03.10 17:32:36 +0530

109, 307 இதச கீழ் முதல் தகவல் அறிக்கை/**அ.த.சா.ஆ.3** பதிவு செய்தேன். பின்பு புகார்தாரர் சையது முகமது மற்றும் அவருடன் வந்த ஜாகீர் உஷேன் என்பவருக்கு காயங்கள் இருந்ததால் அவர்களுக்கு மருத்துவ நமுனா கொடுத்து இளையான்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தேன். பின்பு முதல் தகவல் அறிக்கை நகலையும் காவல் ஆய்வாளர் சாலைகிராமம் காவல்நிலையம் (பொறுப்பு இளையான்குடி காவல்நிலையம்) ஆய்வாளர் உத்தமன் என்பவர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் உத்தமன் இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்து கொண்டு 24.05.2008ம் தேதி மதியம் 03.00 அளவில் சம்பவ இடத்தை சாட்சிகள் முத்து செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர்/**அ.த.சா.ஆ.4** மற்றும் மாதிரி வரைபடம்/**அ.த.சா.ஆ.5** தயார் செய்துள்ளார். பின்பு சாட்சிகள் சையது முகமது மற்றும் ஜாகீர் உஷேன், சையது அப்தாகிம், அப்துல் மஜித், நடராஜன், கண்ணதாசன் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகள் முத்து, செந்தில் குமார் ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 31.05.2008ம் தேதி ஆய்வாளர் உத்தமன் இந்த வழக்கின் எதிரியை புதுார் பஸ்டாப்பில் வைத்து கைது செய்து நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தார். மற்ற வழக்கு எதிரிகள் நீதிமன்றத்தில் சரணடைந்து பிணையில்



N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.10 17:32:41 +0530

*சென்றுள்ளார்கள். பின்பு ஆய்வாளர் உத்தமன் வழக்கு விசாரணை முடித்து சிதம்பர முருகேசன் இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துகொண்டு இந்த வழக்கில் காயம்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்த இளையான்குடி அரசு மருத்துவரை 26.11.2008 ம் விசாரித்து காயச்சான்றிதழ் பெற்றுவாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அ.சா.1 சையது முகமது என்பருக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டு நகல்/**அ.த.சா.ஆ.6**. அ.சா.4–ஜாகீர் உசேன் என்பருக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டு நகல்/**அ.த.சா.ஆ.7.** இத்துடன் ஆய்வாளர் சிதம்பர முருகேசன் வழக்கு விசாரணை முடித்து அன்றையதினமே எதிரிகள் மீது ட்டப்பிரிவுகள் 341, 324, 336, 379, 109, 307 இதச கீழ் குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். ஆய்வாளர்கள் விசாரணையின் போது அ.சா.1 முதல் 4 வரையிலான நபர்கள் எதிரி வழக்கு சம்பத்தில் தங்களை காயப்படுத்தியது குறித்து விசாரணையின் போது வாக்குமூலம் அளித்துள்ளனர்"* என்று சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**7.** அரசு தரப்பு சாட்சியங்களில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு பாதகமாக கூறப்பட்ட சாட்சியங்கள் பற்றி குற்றம் சாட்டப்பட்டவரிடம் கு.வி.மு.ச.313(1)(ஆ) பிரிவின் படி வினவியபோது குற்றம்

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.10 17:32:46 +0530

சாட்டப்பட்டவர் அரசு தரப்பு சாட்சியங்கள் பொய் சாட்சிகள் என்றும், தங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் தெரிவித்துள்ளார். எனவே, குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது.

**8. பிரச்சனை:**

இந்த வழக்கில் தீர்வு காணப்படவேண்டிய சங்கதி யாதெனில் எதிரி மீது பிரிவுகள் 341, 324, 307, 379 உ/இ 109 இ.த.ச–வின் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**9. பிரச்சனைக்கு தீர்வு:–**

அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும்போது, இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகள் பிறழ்சாட்சிகளாக பாவிக்கப்பட்டிருந்தாலும் புகார் கொடுப்பதில் காலதாமதம் ஏற்படவில்லை. முறையாக புலன்விசாரணை செய்யப்பட்டுள்ளது, குற்றம் சாட்டப்பட்டவர் குற்றச்சம்பவத்தில் ஈடுப்பட்டுள்ளார் என்பதை புலன்விசாரணை அலுவலர் தனது சாட்சியத்தில் தெளிவாகச் கூறியுள்ளார். எனவே, குற்றம் சாட்டப்பட்டவர் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் போதுமான சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக ஐயத்திற்கு இடமின்றி

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.10 17:32:51 +0530

நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே குற்றம் சாட்டப்பட்டவருக்கு தக்க தண்டனை வழங்கவேண்டும் என்று வாதிட்டார்.

**10.** இதற்கு குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர், இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகள் அனைவருமே பிறழ் சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ள நிலையிலும், சம்பவத்தில் காயம்பட்ட சாட்சியான அ.சா.1/சையதுமுகம்மது/நிகழ்நிலை புகார்தாரர், சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளான அ.சா.2/அப்துல் மஜித், அ.சா.3/நடராஜன், சம்பவத்தில் காயம்பட்ட சாட்சியான அ.சா.4/ஜாகீர் உசேன், ஆகியோர் தங்களது சாட்சியங்களில் இந்த வழக்கின் எதிரியின் குற்றச்செயல்கள் குறித்து எதுவும் கூறாத நிலையிலும், குற்றம் சாட்டப்பட்டவர் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்று வாதிட்டார்.

**11.** இவ்வழக்கின் சம்பவத்தில் காயம்பட்ட சாட்சியான அ.சா.1/சையதுமுகம்மது/நிகழ்நிலை புகார்தாரர், தனது சாட்சியத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்.

*"நான் தற்போது இளையான்குடி–பரமக்குடி சாலையில் குடியிருந்து வருகிறேன். சம்பவ காலத்தின்போது இளையான்குடியில் சுல்தான் அலாவுதீன் தெருவில் குடியிருந்தேன். வழக்கின் ஆஜர் எதிரியான அப்துல் காசிம்*



N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.10 17:33:02 +0530

என்ற பீடா காசிம் என்பவரை எனக்கு தெரியும். சாட்சி ஜாகீர் உஷேன் தனது சகளை ஆவார். சாட்சி சையது அப்தாகிர் சாட்சி ஜாகீர்உஷேனின் தம்பி. கடந்த 24.05.2008ம் தேதி மதியம் சுமார் 12.00 மணியளவில் பரமக்குடி ரோட்டில் நான் வந்து கொண்டிருந்தேன். அப்போது 3, 4 நபர்கள் காரில் வந்து இறங்கி பாட்டில்களால் என்னை தாக்கினார்கள். எனக்கு அவர்கள் தாக்கியதில் இடதுபக்க தாடை அருகே காயம் ஏற்பட்டது. **காரில் வந்து தாக்கிய நபர்கள் யார் என்று தற்போது ஞாபகமில்லை. என்னுடைய சகளை ஜாகீர்உஷேனுக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது.** நான் எனக்கு ஏற்பட்ட காயங்களுக்காக இளையான்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சென்றேன்.நான் இச்சம்பவம் குறித்து இளையான்குடி காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் இளையான்குடி காவல் நிலையத்தில் கொடுத்தது தான். **நான் புகார் மனுவில் எதிரிகள் குறித்து புகார் எதுவும் கூறவில்லை.** தற்போது காட்டப்படும் புகார் மனுவில் உள்ள சையது முகம்மது என்ற கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் மட்டும்/**அ.த.சா.ஆ.1**. போலிசார் என்னை விசாரித்தார்கள்".

Digitally signed by N SENTHIL MURALI
N SENTHIL MURALI
Date: 2026.03.10 17:33:11 +0530

**11.1.** இவ்வழக்கின் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.சா.2/அப்துல் மஜித், தனது சாட்சியத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்.

*"நான் தற்போது இளையான்குடி குடியிருந்து வருகிறேன். வழக்கின் ஆஜர் எதிரியான அப்துல் காசிம் என்ற பீடா காசிம் என்பவரை எனக்கு தெரியும். அ.சா.1 சையது முகம்மது எனக்கு நண்பராவார். சுமார் 15 வருடங்களுக்கு முன்பு மதியம் சுமார் 1.00 மணியளவில் நான் பரமக்குடிக்கு வந்தபோது நஜீமுதீன் பெட்ரோல் பங்க் அருகே கூட்டமாக இருந்தது. அ.சா.1க்கு இடது பக்க தாடையில் காயம்பட்டிருந்தது. அ.சா.1க்கும் மற்றும் சில நபர்களுக்கும் இடையே சண்டை நடந்ததாக சொன்னார்கள். **அந்த நபர்கள் யாரென்று எனக்கு தெரியாது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை**".*

**11.2.** இவ்வழக்கின் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.சா.3/நடராஜன், தனது சாட்சியத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்.

*"நான் தற்போது சூரக்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் டாஸ்மார்க் கடை எண்.7607 முப்பையூரில் விற்பனையாளராக வேலை பார்த்து வருகிறேன். **அ.சா.1 சையது முகம்மது, சாட்சி ஜாகீர் உசேன் ஆகியோர்களை தெரியாது. வழக்கின் எதிரிகளை***

N SENTHIL MURALI Digitally signed by N SENTHIL MURALI Date: 2026.03.10 17:33:16 +0530

***எனக்கு தெரியாது. அ.சா.1 சையது முகம்மது. சாட்சி ஜாகீர் உசேன் ஆகியோர்கள் எவ்வாறு காயம்பட்டார்கள் என்று எனக்கு தெரியாது.*** *போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்".*

**11.3.** இவ்வழக்கின் சம்பவத்தில் காயம்பட்ட சாட்சியான அ.சா.4/ஜாகீர் உசேன், தனது சாட்சியத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்.

*"நான் தற்போது இளையான்குடியில் குடியிருந்து வருகிறேன். சென்னையில் செல்போன் வியாபாரம் செய்து வருகிறேன். காயம்பட்ட அ.சா.1 சையது முகம்மது என்பவரை எனக்கு தெரியும். அவர் எனக்கு சகளை. எதிரி அகம்மது காசிம் என்ற பீடாகாசிம் என்பவரை எனக்கு தெரியும். சுமார் 12 வருடங்களுக்கு முன்பு நானும் எனது சகளை சையது முகம்மது என்பவரும் வண்டியில் பெட்ரோல் போடுவதற்காக பரமக்குடி போகும் ரோட்டில் வளைவில் காலை சுமார் 12.00 மணியளவில் சென்றபோது சுமார் 4, 5 நபர்கள் வந்து என்னையும் எனது சகளை அ.சா.1–சையது முகம்மது என்பவரையும் தாக்கினார்கள். நான் கீழே விழுந்ததில் நாடியில் காயம் ஏற்பட்டது. எனது சகளை அ.சா.1–சையது முகம்மது என்பவருக்கு காயம்*

*ஏற்பட்டது. **எங்களை தாக்கிய 5, 6 நபர்கள் யார் என்று எனக்கு தெரியாது. அவர்களில் எதிரி அகம்மது காசிம் என்ற பீடா காசிம் இருந்தாரா என்று எனக்கு தெரியாது.** நானும் எனது சகளையும் எங்களுக்கு ஏற்பட்ட காயங்களுக்காக இளையான்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்".*

**12.** நிகழ்நிலை புகார்தாரர் அ.சா.1/சையது முகமது மற்றும் காயம்பட்ட சாட்சியான அ.சா.4/ஜாகீர்உசேன், இவ்வழக்கின் எதிரிகள் தான் தங்களை அடித்து தாக்கினார்கள் என்றும், அ.சா.4 ன் ரூ.5000/- மதிப்புள்ள செல்போனை பறித்துச்சென்றது பற்றி தனது சாட்சியத்தில் எந்தவொரு பொருண்மையையும் குறிப்பிட்டு சொல்லவில்லை. மேலும், இவ்வழக்கின் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளான அ.சா.2/அப்துல் மஜித், அ.சா.3/நடராஜன், ஆகியோரும் தங்களது சாட்சியத்தில் எதிரியின் குற்றச்செயல்கள் குறித்து எதுவும் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், சம்பவத்தில் காயம்பட்ட சாட்சியான அ.சா.1/சையதுமுகம்மது/நிகழ்நிலை புகார்தாரர், சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளான அ.சா.2/அப்துல் மஜித், அ.சா.3/நடராஜன், சம்பவத்தில் காயம்பட்ட சாட்சியான அ.சா.4/ஜாகீர் உசேன், ஆகியோர் தங்களது சாட்சியத்தில் இவ்வழக்கு

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.10 17:33:26 +0530

தொடர்பாக தங்களுக்கு எந்தவொரு சங்கதியும் தெரியாது என்றும், எதிரிகளை தெரியும் ஆனால் எதிரிகள் தான் இவ்வழக்கின் காயம்பட்ட சாட்சிகளை தாக்கினார்களா என்று தங்களுக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்கள். மேற்படி அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் அரசு தரப்பில் பிறழ்சாட்சிகளாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளபோதும் அவர்கள் அரசு வழக்கிற்கு ஆதரவாக எந்தவொரு சங்கதியையும் தங்களது சாட்சியத்தில் குறிப்பிடவில்லை.

**13.** அரசு தரப்பில் இவ்வழக்கினை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் அ.சா.5/திரு.மனோகரன், இவ்வழக்கில் புலன் விசாரணை குறித்து சாட்சியம் அறித்துள்ளார். மேற்படி அ.சா.5 ன் சாட்சியத்தை மட்டும் வைத்து குற்றம் சாட்டப்பட்டவர் தான் குற்ற செயலில் ஈடுபட்டார் என்று தீர்மானிக்க இயலாது. எனவே, எதிரி மீது பிரிவுகள் 341, 324, 307, 379 உ/இ 109 இ.த.ச– வின் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தகுநிலை ஐயத்திற்கு அப்பால் அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

N SENTHIL MURALI Digitally signed by N SENTHIL MURALI Date: 2026.03.10 17:33:31 +0530

**14. இறுதியாக,**

எதிரி பிரிவுகள் 341, 324, 307, 379 உ/இ 109 இ.த.ச– வின் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து, எதிரியை பிரிவு 235(1) குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம், 1973–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கின் பிணைமுறி ஆவணம் மேல்முறையீடு இருப்பின் மேல்முறையீட்டுக் காலத்திற்குப்பின் ரத்தாகவும் பிரிவு 452 கு.வி.மு.ச–வின் கீழ் உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 10–ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.10 17:33:36 +0530

**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**சிவகங்கை.**

**அரசு தரப்பு சாட்சிகள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | திரு. சையதுமுகம்மது | புகார் கொடுத்தது/சம்பவத்தில் காயம்பட்டது பற்றி கூறுகிறார் |
| அ.சா.2 | திரு. அப்துல் மஜித் | சம்பவத்தை நேரில் பார்த்தது பற்றி கூறுகிறார் |
| அ.சா.3 | திரு. நடராஜன் | சம்பவத்தை நேரில் பார்த்தது பற்றி கூறுகிறார் |
| அ.சா.4 | திரு. ஜாகீர் உசேன் | சம்பவத்தில் காயம்பட்டது பற்றி கூறுகிறார் |
| அ.சா.5 | திரு. மனோகரன் | சார்பு ஆய்வாளர்/முதல் தகவல் அறிக்கை பதிவு மற்றும் புலன் விசாரணை குறித்து கூறுகிறார். |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் மனுவில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | புகார் மனு | அ.சா.5 |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.5 |
| அ.சா.ஆ.4 | பார்வை மகஜர் | அ.சா.5 |
| அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் | அ.சா.5 |
| அ.சா.ஆ.6 | விபத்து பதிவேட்டு நகல் | அ.சா.5 |
| அ.சா.ஆ.7 | விபத்து பதிவேட்டு நகல் | அ.சா.5 |

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.10 17:33:41 +0530

**<u>அரசு தரப்பு பொருள் சான்று:</u>** இல்லை

**<u>எதிரியின் தரப்பு சாட்சி:</u>** இல்லை.

**<u>எதிரியின் தரப்பு சான்றாவணங்கள்:</u>** இல்லை.

**<u>எதிரியின் தரப்பு பொருள் சான்று:</u>** இல்லை.

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.10 17:33:47 +0530

**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்**
**சிவகங்கை.**